வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ரோஷ்னா காசிம்

தேதி 23.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தியாகிகள் தினம் மோடி 1 (16)

சுதந்திர போராட்ட வீரர்கள், பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகியோரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப் படுகிறது. இதனை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு மரியாதை செலுத்தி உள்ளார். அவர்கள் மூவரும் 1928 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி லாகூரில் பிரிட்டிஷ் காவல் துறை அதிகாரி ஜே பி சான்டர்சை படுகொலை செய்ய முயற்சி செய்து மரண தண்டனை விதிக்கப்பட்டனர். அவர்கள் மூவரும் 1931 ஆம் ஆண்டு இதே நாளில் லாகூரில் உள்ள மத்திய சிறையில் தூக்கில் இடப்பட்டனர். அவர்களது நினைவு தினத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள எக்ஸ் தள பதிவில், நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த இந்த புரட்சிகர தலைவர்களை அன்புடன் நினைவு கூர்வதாக குறிப்பிட்டுள்ளார். சுதந்திரம் மற்றும் நீதிக்காக அச்சமற்ற அவர்களது முயற்சி மற்றும் தியாகம் நாம் அனைவருக்கும் தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் சுதந்திர போராட்ட வீரர் டாக்டர் ராம் மனோகர் லோக்கியா பிறந்த நாளை ஒட்டி, அவருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக

தியாகிகள் தினம் மோடி 2 (16)

வலைதள பதிவில், ராம் மனோகர் லோக்கியா சமூக நீதிக்கு பாடுபட்ட தலைவர் என கூறியுள்ளார். ஏழை மக்கள் அதிகாரம் பெறவும், வலுவான இந்தியா உருவாவதற்கும் தனது வாழ்வை அவர் அர்ப்பணித்தவர் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர போராட்ட தியாகிகள் பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகியோரின் நினைவு தினத்தை ஒட்டி அவர்களுக்கு பணிவான அஞ்சலியை செலுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தேசபக்தியை விட பெரிய கடமை எதுவும் இல்லை என்பதை தமது வாழ்க்கையின் மூலம் இந்த புரட்சியாளர்கள் நிருபித்ததாக அவர் கூறினார். வீரம் மற்றும் துடிப்பான செயல்கள் மூலம் இளைஞர்களிடம் தேசபக்தியை விதைத்து, சுதந்திர எண்ணங்களை தூண்டியவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் ராம் மனோகர் லோக்கியா பிறந்த நாளை ஒட்டி அவருக்கு மரியாதை செலுத்துவதாக தமது மற்றொரு பதிவில் திரு அமித்ஷா குறிப்பிட்டுள்ளார். பெண் கல்வி, சமூக சமத்துவம் மற்றும் அரசியல் தூய்மை ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட லோக்கியா வின்

தியாகிகள் தினம் மோடி 3 (8)

சிந்தனைகள் அனைவருக்கும் ஊக்கம் அளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் புரட்சியாளர்கள் பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுருவின் தியாகம் வரும் தலைமுறையினருக்கு அசைக்க முடியாத தேச பக்தியுடன் தைரியத்தையும், சேவை செய்யும்

எண்ணத்தையும் தூண்டுவதாக கூறியுள்ளார். வலுவான இந்தியாவை உருவாக்கும் அவர்களது கனவு நம்மை தொடர்ந்து வழி நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*ஜெய்சங்கர்* (12)

தூய எரிசக்தி உற்பத்தியில் உலக நாடுகள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு விரிவான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். தனியார் செய்தி நிறுவனத்திற்கு காணொளி மூலம் அவர் அளித்த பேட்டியில், இதற்கென தொழில் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். எரிசக்தி துறையில் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு ஏற்றுமதி கட்டுப்பாடுகள், இறக்குமதி தீர்வை போன்ற அம்சங்களில் நிலையான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், வலுவான வர்த்தக நடைமுறைகள், உணவு மற்றும் சுகாதார பாதுகாப்பு திட்டங்கள் ஆகியவை பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் என்றும் அவர் தெரிவித்தார்.

*நிர்மலா சீதாராமன்* (19)

அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய அரசு திட்டங்களை வகுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு 109 பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண் சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு, மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் கூறினார். கடந்த 10 ஆண்டு கால பிஜேபி

ஆட்சியில் தமிழக அரசு பல்வேறு வழிகளில் பலன் அடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். நாடு முழுவதும் ஜன் தன் யோஜனா திட்டத்தின் கீழ், 12 லட்சம் பேரும், மானிய விலையில் சமையல் எரிவாயு வழங்கும் திட்டத்தின் கீழ் 41 லட்சம் பேரும் பயனடைந்து இருப்பதாக அவர் தெரிவித்தார். இதுவரை 89 லட்சம் குடும்பங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு இருப்பதாகவும், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 79 லட்சம் குடும்பங்கள் பயன் அடைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் 4 ஆயிரத்து 100 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள் நவீன மயமாக்கப்பட்டு உள்ளதாகவும், ஆயிரத்து 333 புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதாகவும், 2 ஆயிரத்து 242 ரயில் நிலையங்கள் மின் மயம் ஆக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜிடிபி(14)

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 2 மடங்காக அதிகரித்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றுக்கு அடுத்தப்படியாக உலகின் 5 ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா தற்போது திகழ்வதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானை பின்னுக்கு தள்ளி இந்தியா விரைவில் முன்னேறும் என்றும் அந்த அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு 2.1 டிரில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 2025 ஆம் ஆண்டு 4.3 டிரில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதன் மூலம் வளர்ச்சி 105 சதவிகிதம் உயர்ந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த காலகட்டத்தில் அமெரிக்காவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 66 சதவிகிதமும், சீனாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 44 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.

*நியூசிலாந்து பிரதமர்* (12)

தமது இந்திய பயணமும், பிரதமர் திரு நரேந்திர மோடியுடனான சந்திப்பும் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்தோபர் லக்சான் தெரிவித்துள்ளார். இந்த மாதம் 16 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அவர், நியூசிலாந்து சென்ற பிறகு தமது பயணம் குறித்து எக்ஸ் தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளார். அதில், வெளிங்டனுக்கும், புதுடெல்லிக்கும் இடையிலான உறவு வலுவடைந்துள்ளதாக கூறியுள்ளார். இந்தியாவுடன், பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பிற துறைகளில் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதில் தமது பயணம் முக்கியத்துவம் பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியா, நியூசிலாந்தின் முக்கியமான நட்பு நாடு என்றும், இருநாடுகளின் உறவுகளை வலுப்படுத்துவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடியை தாம் சந்தித்தது குறித்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*மாண்டவியா* (9)

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் ஆரோக்கிய இந்தியா இயக்கத்தின் சார்பில் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று பங்கேற்பாளர்களுடன் இணைந்து சைக்கிள் பயணம் மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்று மாசுபாட்டை குறைக்க சைக்கிள் பயணம் ஒரு தீர்வாக அமையும் என்று கூறினார். சைக்கிள் ஓட்டுதல் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். பொதுமக்கள் அனைவரும் 1 மணி நேரம் சைக்கிள் பயணம் மேற்கொண்டு, ஆரோக்கியமான இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேர்தல் ஆணையம் (12)

வாக்குச்சாவடி அளவிலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் அதிகாரிகள் அனைத்து கட்சி கூட்டங்களை நடத்தி வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் தரவுகளில் முறைகேடுகள் நடைபெறுவதாக எதிர்கட்சிகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்க தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நாடு முழுவதும் சட்டப்பேரவை தொகுதிகளில் 4 ஆயிரத்து 123 தேர்தல் பதிவு அதிகாரிகள் பங்கேற்கும் அனைத்து கட்சிகளின் ஆலோசனை கூட்டம் வரும் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், மாவட்ட அளவில் அனைத்து கட்சி ஆலோசனை கூட்டங்களை நடத்த 788 மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மாநில அளவில் ஆலோசனை கூட்டங்களை நடத்த 36 தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏனாம் (15)

ஏனாம் பகுதியை சேர்ந்த ரொட்டிப் பால் ஊழியர் சங்க உறுப்பினர்கள் புதுச்சேரி துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் திரு ரங்கசாமி மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். ஏனாம் பகுதியில் 42 ரொட்டிப் பால் ஊழியர்கள் கடந்த 20 ஆண்டுகாலமாக 10 ஆயிரம் ரூபாய் ஊதியம் பெற்று வந்த நிலையில், தற்போது வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல், 18 ஆயிரம் ரூபாய் ஊதியம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து அவர்கள் துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் மற்றும் பிற அமைச்சர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

ஏனாம் பகுதி சிறப்பு சிறையில் இருந்து தப்பிய குற்றவாளியை 7 மணி நேரத்திற்குள் பிடித்த தலைமை காவலர்களை ஏனாம் காவல் ஆய்வாளர் திரு சண்முகம், ஒய்வு பெற்ற ஆய்வாளர் திரு சிவகணேஷ்

ஆகியோர் பாராட்டி உள்ளனர். ஏனாம் சிறையில் இருந்து நேற்று பிற்பகல் தப்பிய கைதி வெங்கடேஸ்வரலு ஐதராபாத் செல்ல திட்டமிட்டிருந்த நிலையில் அவரை சிறப்பு நிலை தலைமை காவலர் ஏசுபாபு, சுரேஷ், கணேஷ் ஆகியோர் பிடித்து மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர்.

ஐபில் (7)

18 ஆவது ஐபிஎல் கிரிக்கெட் போட்டி தொடர் நேற்று கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் கணகவர் நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. நேற்று நடைபெற்ற முதல் லீக் போட்டியில் கொல்கத்தா அணியை வீழ்த்தி, பெங்களுரு அணி வெற்றி பெற்றுள்ளது. ஐதராபாத்தில் இன்று மாலை நடைபெறும் போட்டியில் ராஜஸ்தான்-ஐதராபாத் அணிகள் மோதுகின்றன. இரவு 7.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் மற்றொரு போட்டியில் சென்னை-மும்பை அணிகள் விளையாடுகின்றன.